**HMOP .No. 156/2021**

**Date : 17.11.2022**

***ம.சா.1 சந்திரகோபால்***

***எ.த.கு.வி***

நான் அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழாசிரியராக 9 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழந்த காலம் வரை பணி எதுவும் இல்லாமல் இல்லதரசியாக மட்டுமே வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். நான் மாதம் ரூ 60 ஆயிரம் சம்பளம் வாங்குகிறேன். 2015ம் ஆண்டு வாக்கில் நான் மாதம் ரூ 30 ஆயிரம் சம்பளம் பெற்றிருந்தேன். எங்கள் திருமணம் பெரியோர்களால் ஒரு மாதத்திற்கு முன்னர் நிச்சயிக்கப்பட்டு அதன்படி திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் பந்தல் கால் நடப்பட்டு, திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அவ்வாறு பந்தல் கால் நடும்பொழுது எங்கள் சமுதாய வழக்கப்படி கொடுக்கல் வாங்கல் பரிமாற்றம் எதுவும் நடைபெறவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள நீலநிற சட்டை அணிந்துள்ள நபர் நான் தான் ஆனால் அது எப்பொழுது எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த புகைப்படத்தில் மாலை போட்டுள்ள மற்றொரு நபர் எதிர்மனுதாரின் உடன் பிறந்த தம்பி ஆவார். என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோ ஆல்பம் எப்பொழுது எடுக்கப்பட்டது என்று நினைவில்லை. என்னுடைய குடும்பத்தில் இருந்து எதிர்மனுதாரின் குடும்பத்தில் எங்கள் திருமணம் தவிர்த்து வேறு எவ்வித திருமணமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட புகைப்படம் எப்பொழுது எந்த விசேசத்திற்காக எடுக்கப்பட்டது என்பது எனக்கு நன்கு தெரியும் என்றாலும்,. தற்பொழுது அதை நான் ஒப்புக்கொள்ளும்பட்சம் எனக்கு விரோதமாக அமையும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் களப்பாகுளம் கிராமத்தில் தான் பிறந்தேன் என்றால் சரிதான். களப்பாகுளத்தில் எதிர்மனுதாரின் உறவினர்கள் யாரும் கிடையாது என்றால் சரிதான். எங்களுக்கு திருமணம் ஆகி 11 மாதங்களில் குழந்தை பிறந்தது. எங்களுக்கு திருமணம் ஆகி 1மாதத்தில் எதிர்மனுதார் கருவுற்றார் என்றால் சரிதான். எங்களுக்கு இரண்டாவது குழந்தை 21.08.2019 ல் பிறந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2வது குழந்தை பிறந்தது குறித்து எதிர்மனுதார் என்னிடம் கூறாததால்

குழந்தை பிறந்த தேதி எனக்கு தெரியாது. ஆனால் எதிர்மனுதார் குழந்தைக்கு கருவுற்றது எனக்கு தெரியும் அவ்வாறு எதிர்மனுதார் 2வது குழந்தைக்கு கருவுற்று 4, 5 மாதங்கள் வரை என்னுடன் இருந்தார். அக்காலகட்டத்தில் எதிர்மனுதார் பயன்படுத்தும் சீப்பு, டம்ளர் உள்ளிட்ட பொருட்களை நான் பயன்படுத்தினால் எதிர்மனுதார் திட்டி சண்டையிட ஆரம்பித்துவிடுவார் என வழக்கிற்காக பொய்யாக காரணம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என் மீது 25.03.2019ல் கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அளித்த புகாரின் விசாரணைக்கு நான் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். அந்த விசாரணையில் எதிர்மனுதார் நான்கு மாதம் கருவுற்றுள்ளதால் எதிர்மனுதாரின் உடல் நலனை கருத்தில் கொண்டு எதிர்மனுதார் அவரது பெற்றோர் வீட்டில் தங்கியிருக்க வேண்டும் என்றும், அதற்கு நான் மாதம் ரூ 3ஆயிரம் கொடுக்கவேண்டும் என சமரசம் பேசப்பட்டு அறிவுரை வழ்ங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் 25.03.2019 தேதியில் காவல்நிலையத்தில் ஏற்படுத்தியுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சரத்துக்கள் நான் கூறவில்லை. மேலும் அதில் கண்டவாறு அன்றைய தினம் நானும் எதிர்மனுதாரிடம் ரூ 3 ஆயிரமோ, வீட்டு சாவியோ ஒப்படைக்கவில்லை. 25.03.2019 தேதிய விசாரணையில் எதிர்மனுதாருக்கு மாதம் ரூ 3 ஆயிரம் கர்பகாலத்தில் கொடுப்பதாகவும், அதேபோல் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ்வதாக கூறி வாக்குமூலம் அளித்து தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிர்மனுதார் மீது 2019ம் ஆண்டு புகார் அளித்தேன், ஆனால் தேதி மாதம் நினைவில்லை. எங்களது 2வது குழந்தை பிறப்பதற்கு முன்னர் தான் எதிர்மனுதார் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்தேன் எ்ன்றால் சரிதான். எதிர்மனுதாரை சேர்ந்து வாழ கோரி நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் அளித்த புகார் ஆனது சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தது. அதன்பேரில் நானும் எதிர்மனுதாரும் சங்கரன்கோவில் அனைத்து

மகளிர் காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜர் ஆன போது இருவரும் சேர்ந்து வாழுமாறு போலிசார் அறிவுரை கூறியதை எதிர்மனுதார் ஏற்றுகொள்ளமறுத்துவிட்டார். சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்றதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் காவல்நிலையத்தில் எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ மறுத்தது கிடையாது என்றாலும், அதனால் தான் அதுகுறித்தான ஆவணம் எதையும் நீதிமன்றத்தீல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 09.01.2021 ல் காலம் ஆனார். எனது தகப்பனார் இறப்பு விவரம் எதிர்மனுதாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அதன்படி எதிர்மனுதார் மற்றும் அவரது குடும்பத்தார்கள் துக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சமுதாய செய்முறைகள் செய்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்த தினத்தில் இருந்து 16ம் நாள் காரிய விசேசம் வரை எதிர்மனுதார் என்னுடன் எனது வீட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு செல்லத்துரை என்ற பெயரில் ஒரு சித்தப்பாவும், ஒரு மாமாவும் உள்ளார். 10 வீட்டுகாரன் என்ற பட்டப்பெயர் உள்ள செல்லத்துரை எனது சித்தப்பா ஆவார். எனது தகப்பனாரின் 16ம் நாள் காரிய விசேசத்திற்கு பின்னர் எனது சித்தப்பா செல்லத்துரை என்னையும் எதிர்மனுதாரையும் சமரசம் பேசி களப்பாகுளத்தில் உள்ள அவரது வீட்டில் தனிக்குடித்தனம் இருக்க வைத்தார் என்றால் சரியல்ல. அதன்படி நானும் எதிர்மனுதாரும் களப்பாகுளத்தில் உள்ள செல்லத்துரை வீட்டில் தனிக்குடித்தனம் 2021ம் ஆண்டு இருந்துவிட்டு தற்பொழுது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எதிர்மனுதார் என்னை இல் வாழ்வில் இருந்து புறம்தள்ளி தனியாக வாழ்ந்து வருவதாக பொய்யாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் களப்பாகுளத்தில் என்னுடன் 24.04.2021 வரை என்னுடன் ஒன்றாக குடித்தனம் செய்தார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் எனது கொடுமை தாங்காமல் 24.04.2021 க்கு பின்னர் எதிர்மனுதார் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரை பல்வகையில் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு வகையில் எதிர்மனுதாரை கொடுமைப்படுத்திய பொழுதும் அவரது

எதிர்காலம் மற்றும் இரண்டு பெண்குழந்தைகளின் எதிர்காலம் கருதி எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு 2 பெண்குழந்தைகள் உள்ளதால் எதிர்மனுதாரை விவாகரத்து செய்து வேறு திருமணம் செய்யும் நோக்கில் பொய்யான காரணம் குறிப்பிட்டு இம்மனுவினை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என்னை எவ்வகையிலும் கொடுமை செய்யவில்லை என்பதால் தான் திருமணம், குழந்தைகள் பிறந்த தேதி தவிர்த்து மற்ற சம்பவம் குறித்து தேதி எதுவும் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிர்மனுதார் என்னை பல்வகையில் கொடுமைப்படுத்தி இல்வாழ்வில் புறம் தள்ளி வாழவில்லை என்றால் சரியல்ல. எனவே மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**